# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ALANGULAM

Calendar }
Miscellaneous } CC 61/2019
Sessions }

Deposition of witness for { Prosecution P.W. 1 / Defence / Court

Name : திருமலையாச்சி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.02.2021

மு.வி :- நான் ஊத்துமலையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது மகன் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அசா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். வழக்கை மேல் நடத்தவிருப்பமில்லை. எதிரி என்னை அசிங்கமாக பேசவில்லை, என்னை பெண்ணென்றும் பாராமல் கீழே தள்ளவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை. வழக்குப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

(சாட்சிப் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

அ.த.கு.வி. - போலீசார் விசாரணையில் நான் கடந்த 11.02.2017ஆம் இரவு 8 மணிக்கு எனது வீட்டு முன்பு நான் நின்று கொண்டிருக்கும் போது அங்கு வந்த எதிரி மது அருந்திவிட்டு எனது வீட்டு முன்பு வந்து என்னை கெட்ட வார்த்தையால் பேசி, என் மனைவியை என்னுடைய இருக்கவிடாமல் விரட்டி விட்டு என் குடும்பத்தை கெடுத்துவிட்டாய் இன்றைக்கு உன்னை கொன்று சுடுகாட்டில் கொண்டு போய் எரித்து சாம்பலாக்கி விடுவேன் என்று சொல்லி எனது தலைமுடியை பிடித்து இழுத்து கீழே தள்ளினார் என்றும், எனது கணவர் தடுத்தார் என்றும், அவரை எதிரி காலால் மிதித்து தள்ளினார் என்றும், சத்தம் கேட்டு ஓடி வந்து எனது மகன் முத்துக்குமாரும் எனது மருமகள் கலாசெல்வியும மற்றும் வெள்ளத்தாயும் சத்தம் போடவும் கிழக்கு நோக்கி ஓடியவன் அவனது வலது கை பெருவிரலால் எங்க வீட்டின் தென்புறமுள்ள முத்தையா என்பவர் வீட்டின் முன்புள்ள தெரு பைப்பிற்கு போடப்பட்ட குத்துக்கல்லில் இடித்து ரத்தகாயம் ஏற்பட்டது என்றும், மேலும் எனக்கும், எனது கணவருக்கும் ஏற்பட்ட சிறிய காயம் என்பதால் மருத்துவமனைக்கு செல்லவிரும்பவில்லை என்றும், நடந்த சம்பவத்திற்கு ஊத்துமலை காவல் நிலையம் சென்று புகார் மனு கெடுத்தேன் என்றும், இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்று, போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரி மகன் என்பதால் அவரை வழக்கிலிருந்து விடுவிக்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.